**SC NO. 204/2018**

**22.03.2021**

**அ சா 1 திரு. ராஜேஷ், த/பெ. அன்பழகன், வயது 38, போரூர்.**

**சாட்சி**

<u>**முதல் விசாரணை**</u>

நான் போரூரில் குடியிருக்கிறேன். நான் இன்டெக் ஆட்டோ கன்சல்டன்சி வைத்து சொந்தமாக நடத்தி வருகிறேன். கார், மோட்டார் சைக்கிள் வாங்கி விற்கும் தொழில் செய்கிறேன். 2010ம் ஆண்டு முதல் நான் வாடகைக்கு கடை நடத்தி வருகிறேன். அதற்காக **ரூ.5** லட்சம் பணம் கொடுத்திருக்கிறேன். அந்த இடத்தின் உரிமையாளர் பார்த்தசாரதி. 12.10.2015 அன்று காலை 8.30 மணிக்கு கடைக்கு வந்து முன்பக்கம் உள்ள ரோலிங் ஷட்டரை திறந்தேன். நான் பார்த்தபோது கடையின் பின்பக்க சுவற்றை உடைத்து கடையினுள்ளே தள்ளிவிட்டார்கள். சுவரை உடைத்தது பார்த்தசாரதி. நான் கடையை திறந்தபோது பார்த்தசாரதி என் கடையின் உள்ளே இருந்தார். நான் என்ன என்று கேட்டபோது நீ யார் கேட்பது என்று சொல்லி என்னை தகாத வார்த்தையால் திட்டினார். என் அப்பாவிற்கு தொலைபேசி மூலம் தெரிவித்தேன். மேலும் போலீஸ் எண் 100க்கும் போன் செய்தேன். அதன்பேரில் போலீசார் வந்தார்கள். போலீசார் விசாரித்தார்கள். புகைப்படம் எடுத்தார்கள். நான் கடை உள்ளே **ரூ.85,000**/- பணம் வைத்திருந்தேன். சில ஆவணங்களையும் காணவில்லை. பொருட்களும் சேதமாகி இருந்தது. போலீசார் என்னை விசாரித்தபோது நான் மேற்சொன்ன விவரத்தை தெரிவித்தேன். நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரி பார்த்தசாரதியை சாட்சி அடையாளம் காண்பிக்கிறார். நான் எஸ்.ஆர்.எம்.சி. காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன். காண்பிக்கப்படும் புகார் என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் அசாஆ1.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் ஒருசிலவற்றை எழுதுவேன் என்று கூறுகிறார். நான் தொழில் செய்கிறேன்

என்பதற்கு ஆதாரமாக புகாரோடு சேர்த்து ஆவணம் கொடுத்தேனா என்றால் சாட்சி கொடுத்ததாக கூறுகிறார். ஒப்பந்த பத்திரத்தின் புகைப்பட நகல் மற்றும் என்னுடைய விசிடிங் கார்டு கொடுத்தேன். 21.10.2015 அன்று தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்கான காரணம் என்ன என்றால் சாட்சி புகாரை வாபஸ் வாங்க மிரட்டினார்கள் என்றும், போலீசாரும் தன்னுடைய புகாரை வாங்கவில்லை என்று கூறுகிறார். என்னை மிரட்டினார்கள் என்பதற்காக சம்பவத்திற்கு பிறகு நான் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை. சாட்சி வாய்மொழியாக சொன்னதாக கூறுகிறார். என்னை மிரட்டினார்கள் என்று நான் புகாரிலும் சொல்லவில்லை, போலீசார் என்னை விசாரித்தபோதும் சொல்லவில்லை, தற்போது முதன்முதலாக நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இன்டெக் ஆட்டோ கன்சல்டன்சி என்ற நிறுவனத்தை நடத்துவதற்கு நான் உரிமம் எதுவும் பெறவில்லை. நான் சொல்வது போல் தொழில் செய்யவில்லை என்றும், பார்த்தசாரதியிடம் வாடகைதாரராகவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்லும் இடத்தில் தொழில் எதுவும் செய்யவில்லை என்றும், பார்த்தசாரதி கஸ்தூரிரங்கன் என்பவருக்கு தொழில் நடத்த இடம் கொடுத்தார் என்றும், நான் கஸ்தூரிரங்கனிடம் வேலை செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. கஸ்தூரிரங்கனை எனக்கு தெரியும், அவர் பணம் கொடுத்து வாங்கும் தொழில் செய்கிறார். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட இடம் பார்த்தசாரதியின் சொத்தா அல்லது அவரது தகப்பனாருக்கு பாக்கியப்பட்டதா என்றால் சாட்சி பார்த்தசாரதியிடம் தான் தான் ஒப்பந்தம் செய்ததாகவும், அவரிடம் தான் பணம் கொடுத்ததாகவும் கூறுகிறார். அந்த பார்த்தசாரதிக்கு சொந்தமான இடம் இல்லை என்றும், பார்த்தசாரதியின் தகப்பனாருக்கு சொந்தமான இடம் என்றும், நான் ஒப்பந்தம் ஏதேனும் போட்டிருந்தால் பார்த்தசாரதியின் தகப்பனாரிடம் தான் போட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் ஒப்பந்தம் போட்ட காலத்தில் பார்த்தசாரதியின் தகப்பனார் உயிருடன் இல்லை. நான் ஒப்பந்தம் போட்டதாக

சொன்ன காலத்தில் பார்த்தசாரதியின் அப்பா உயிருடன் இருந்தார் என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 100க்கு போன் செய்தபோது ஜீப்பில் எஸ்.ஆர்.எம். போலீசார் இருவர் வந்தனர். நான் 100 எண்ணிற்கு போன் செய்தபோது காலை 10.45 மணி இருக்கும். சம்பவ இடம் ஜனநடமாட்டம் அதிகமுள்ள இடம் என்றால் சரிதான். போலீசார் யார் யாரை விசாரித்தார்கள் என்றால் பக்கத்து கடை மெக்கானிக் ஷாப் நடத்துபவரை விசாரித்ததாக கூறுகிறார். அசாஆ1 புகாரை நான் எழுதவில்லை. கையெழுத்து போட்டேன். அசாஆ1 புகாரில் தேதி 12.10.2015 என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ1 புகாரில் முதலில் 2 வருடங்கள் லீசிற்கு என்று எழுதப்பட்டு 2 என்பது 5 ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு ஆக்சிஸ் வங்கியில் வங்கி கணக்கு உள்ளது. அந்த வங்கி கணக்கு என்னுடைய தனிப்பட்ட பெயரில் தான் உள்ளது, நிறுவனத்தின் பெயரில் இல்லை. புகாரில் நான் சொல்லியுள்ள காசோலை என்பது என்னுடைய வங்கி கணக்கு காசோலை இல்லை, என் பெயருக்கு வந்த காசோலை. அசாஆ1 புகாரிலும் போலீசார் விசாரணையிலும் என் பெயரில் கொடுக்கப்பட்ட காசோலை என்று சொல்லவில்லை என்றால் சாட்சி சொல்லியிருப்பதாக கூறுகிறார். பொதுவாக தினசரி காலை 8.30 மணிக்கு கடையை திறப்போம், இரவு 9 மணியளவில் மூடுவோம், மதிய உணவின்போது ஷட்டரை மட்டும் மூடிவிட்டு சென்றுவிடுவோம். நான் கடையை திறந்தபோது 1ம் எதிரி பார்த்தசாரதி கடையின் உள்ளே இருந்தார் என்ற விவரத்தை புகாரில் சொல்லவில்லை என்றும், தற்போது முதன்முதலாக நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இன்னார் தான் சுவற்றை இடித்தார் என்று நான் புகாரில் சொல்லவில்லை என்றால் சாட்சி சொல்லியிருப்பதாக கூறுகிறார். என் புகாரில் ரூ.85 ஆயிரம் என்ன வகையான ரூபாய் நோட்டுக்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. அந்த பணம் யாருடையது, எந்த வகையில் வந்தது என்ற விவரத்தையும் நான் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சாட்சி இரு சக்கர வாகனம் விற்று வந்ததாக தானாக கூறுகிறார். ஹீரோ ஹோண்டா கரிஷ்மா என்ற இருசக்கர வாகனத்தை செந்தில் என்ற நபருக்கு விற்றேன். நான் செந்தில் என்பவருக்கு **ரூ.54,000**/- மட்டும் தான் விற்றேன். பாக்கி **ரூ.31,000**/- எப்படி வந்தது என்று சொல்லவில்லை என்றால் சாட்சி எப்போதும் கடையில் தான் பணம் வைத்திருந்ததாக கூறுகிறார். கஸ்தூரிரங்கனிடம் போடப்பட்ட வாடகை ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்தினை பார்த்து கஸ்தூரிரங்கனிடம் நான் வேலை பார்த்ததால் போலியாக ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. நானே வாடகை ஒப்பந்தத்தை தயார் செய்ததால் தான் அசல் ஆவணம் காணாமல் போய்விட்டதாக நான் கொடுத்த புகாரில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 19.10.2015 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பார்த்தசாரதி அனுப்பியது எனக்கு வரவில்லை. என்னுடைய விலாசம் நம்பர் 40, பெருமாள் கோயில் தெரு, தனலட்சுமி நகர், மவுலிவாக்கம், சென்னை 125 என்றால் சரிதான். பார்த்தசாரதி அறிவிப்பு அனுப்பினார் என்றும், அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றும், தற்போது வழக்கிற்காக அறிவிப்பை வாங்கவில்லை என்றும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பார்த்தசாரதி எஸ்.ஆர்.எம்.சி. காவல் நிலைய ஆய்வாளருக்கும் அதே அறிவிப்பினை அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 12.10.2015 முதல் 19.10.2015 வரை நான் போலியான ஆவணத்தை தயார் செய்து எதிரியிடம் கட்டப்பஞ்சாயத்து செய்தேன் என்றும், அவர் மறுத்ததால் தான் 21.10.2015 அன்று இந்த புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரி என்மீது நடவடிக்கை எடுப்பார் என்ற எண்ணத்தில் போலியான ஆவணம் தயார் செய்து இந்த புகாரைக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட இடத்தில் குளிர்சாதனப் பெட்டி இருக்கிறது. பெனசோனிக் ஸ்பிலிட் ஏசி 1 டன் அளவுள்ளது. ஸ்விப்ட் காரின் அலாய் வீல், குளிர்சாதனப் பெட்டியின் பெயர் மற்றும் காரினுடைய பெயர் புகாரில் சொல்லவில்லை என்றும், தற்போது முதன்முதலாக

நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பிளம்மிங் காண்டிராக்ட் தொழில் செய்கிறார். என் தகப்பனார் மனித உரிமை கழகத்தில் உறுப்பினராக இருக்கிறார், நான் இல்லை. மனித உரிமை கழகத்தில் இருப்பதாக சொல்லி நானும் என் தகப்பனாரும் பல நபர்களை மிரட்டி பணம் பறிப்பதே எங்கள் வேலை என்று சொன்னால் சரியல்ல. வாடகை பாக்கி தராததால் கஸ்தூரி ரங்கனை காலி செய்ய வேண்டும் என்று பூந்தமல்லி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பார்த்தசாரதி அவரது அண்ணன்கள் மற்றும் தாயார் ஆர்சிஓபி எண் 73/2015ன் படி மனு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தப்பட்ட இடத்தை நீதிமன்றத்தின் மூலமாக பார்த்தசாரதியும் அவரது குடும்பத்தாரும் சுவாதீனம் எடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2015ம் ஆண்டில் இந்த இடத்தின் சாவி என்னிடம் தான் இருந்தது. 12.10.2015க்குப் பிறகு நான் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தப்பட்ட இடத்தின் சுவாதீனத்தை நான் எதிரியிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த இடத்தின் சாவி என்னிடம் இல்லை என்றும், கஸ்தூரிரங்கன் வசமிருந்து நீதிமன்றம் மூலமாக எதிரி சுவாதீனம் பெற்றார் என்றால் சரியல்ல. இன்றுவரை பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று எதிரிக்கு அறிவிப்போ அல்லது நீதிமன்றத்தில் வழக்கோ தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வதுபோல் ஒப்பந்தம் ஏதுமில்லை என்றும், பணமும் நான் கொடுக்கவில்லை என்றும், அதனால்தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் பணத்தை கேட்டு கொடுக்காததால் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி இந்த புகாரைக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**SC NO. 204/2018**

**22.03.2021**

**அ சா 2 திரு. அன்பழகன், த/பெ. ரகுபதி, வயது 64, மவுலிவாக்கம்.**

**சாட்சி**

<u>முதல் விசாரணை</u>

நான் மவுலிவாக்கத்தில் குடியிருக்கிறேன். அ.சா.1 எனது மகன். நான் எலக்கடிரிஷியன் அண்ட் பிளம்மிங் தொழில் செய்கிறேன். எனது மகன் கார், மோட்டார் சைக்கிள் வாங்கி விற்கும் தொழில் செய்கிறான். 12.10.2015 அன்று காலை என் மகன் கடையை திறந்தபோது, பின்புற சுவர் முழுமையாக உடைக்கப்பட்டு இருந்தது. பொருட்களும் சேதமடைந்திருந்தது. புகைப்படம் எடுக்கப்பட்டு, அதை போலீசாரிடம் கொடுத்தோம். என்னென்ன பொருட்கள் சேதமடைந்திருந்தது என்று தெரியாது. போலீசாரும் வந்து இடத்தை புகைப்படம் எடுத்தார்கள். போலீசார் புகைப்படம் எடுக்கும்போது அவர்களையும் சேர்ந்தாற்போல் நாங்கள் புகைப்படம் எடுத்தோம். கடை சேதமடைந்த விவரத்தை என் மகன் தொலைபேசியில் என்னிடம் சொன்னார். நான் 100க்கு போன் செய்ய சொன்னேன். நாகேஷ் என்ற உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். நானும் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டேன். உடனே சாயந்திரம் 7.30 மணிக்கு காவல்நிலையத்திற்கு சென்றோம். சம்பவம் சம்பந்தமாக என் மகன் புகார் கொடுத்தார். போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. என் மகன் எத்தனை மணிக்கு எனக்கு போன் செய்தார் என்றால் 8.30 மணி முதல் 9 மணிக்குள்ளாக இருக்கும். என்னை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் விசாரித்தார்கள். என்னை போலீசார் விசாரித்தபோது என் மகன் பதற்றத்துடன் வீட்டிற்கு வந்துவிட்டதாக சொல்லவில்லை. என்னை போலீசார் விசாரித்தது 12.10.2015 அன்று. 21.10.2015 அன்று என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சாட்சி தன்னுடைய வாக்குமூலத்தை போலீசார்

வாங்கிக் கொண்டதாக கூறுகிறார். நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றும், போலியாக ஒப்பந்தத்தை தயார் செய்து நாங்கள் கட்டப்பஞ்சாயத்து செய்தோம் என்றும், எதிரி ஒப்புக்கொள்ளவில்லை என்றும், தற்போது சாட்சி ராஜேஷ் என் மகன் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனித உரிமை கழகத்தின் தலைவர் என்ற முறையில் அங்குள்ள கடைக்காரர்களை மிரட்டி கட்டப்பஞ்சாயத்து செய்வது எனக்கும் என் மகனுக்கும் தொழில் என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றும், பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி பார்த்தசாரதி வழக்கிஞர் மூலம் என் மகனின் பெயருக்கு ஒரு பதிவுத் தபாலைப் பெற்று நான் வீட்டில் வைத்திருக்கிறேன். இன்றுவரை அந்த அறிவிப்பினை பிரித்து பார்க்கவில்லை. அறிவிப்பு வந்த விவரத்தை நான் என் மனைவியிடம் சொன்னேன். அவர் என் மகனிடம் சொன்னாரா என்று எனக்கு தெரியாது. 19.10.2015 தேதியிட்ட அறிவிப்பினைப் பெற்று அதிலுள்ள சங்கதிகளை தெரிந்து கொண்டு, அதன்பிறகு தான் 21.10.2015 அன்று பொய்யான புகார் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கஸ்தூரிரங்கன் என்பவரை எனக்கு தெரியாது. கஸ்தூரிரங்கனுக்கும் பாரத்தசாரதிக்கும் தான் கடை ஒப்பந்தம் போடப்பட்டது என்றும், கஸ்தூரிரங்கனிடம் என் மகன் வேலை செய்தார் என்றும், அந்த ஒப்பந்தத்தை பார்த்து போலியான ஒப்பந்தம் போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**SC NO. 204/2018**

**22.03.2021**

**அ சா 3 திரு. முகமது ரஜாலி, த/பெ. காஜா மொய்தீன், வயது 35, மவுலிவாக்கம்.**

**சாட்சி**

**முதல் விசாரணை**

நான் மவுலிவாக்கத்தில் குடியிருக்கிறேன். நான் சொந்தமாக துணிக்கடை வைத்திருக்கிறேன். அசா1 ராஜேஷ் என்பவரிடம் நான் வண்டி வாங்கிய வகையில் அவரை எனக்கு பழக்கம். 12.10.2015 அன்று நான் விக்னேஷ்வரா நகரில் உள்ள ராஜேஷ் கடைக்கு சென்றேன். அங்கு நான் போகும்போது உள்ளுக்குள் சுவற்றை இடித்து இருந்தார்கள். ராஜேஷு ுக்கும் பார்த்தசாரதிக்கும் சண்டையாகிவிட்டது. என்ன என்று கேட்டதற்கு காலி செய்ய சொன்னார்கள் என்றும், இடித்துவிட்டார்கள் என்றும் ராஜேஷ் சொன்னார். பர்னிச்சர் உடைந்துவிட்டது என்று ராஜேஷ் சொன்னார். நான் போகும்போது சேதமாகி இருந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போகும்போது நேரம் காலை 11 முதல் 12 மணி வரை இருக்கும். நான் செல்லும்போது ராஜேஷ், பார்த்தசாரதி இருந்தார்கள். மற்றவர்கள் யார் இருந்தார்கள் என்று ஞாபகமில்லை. ராஜேஷ் கடை நடத்தினார் என்பதற்கு உண்டான கடை வாடகை ஒப்பந்தத்தை நான் பார்க்கவில்லை. ஒப்பந்தத்தில் நான் எதுவும் சாட்சி கையெழுத்து போடவில்லை. ராஜேஷின் கடையின் பெயர் இன்டெக் ஆட்டோ. நான் செல்லும்போது போலீசார் யாரும் இல்லை, அதன்பிறகு தான் வந்தார்கள். நான் பகல் ஒருமணி வரை அங்கிருந்தேன். பகல் 12.30 அல்லது 1.00 மணியளவில் போலீசார் வந்தார்கள். நான் சென்ற அன்றே என்னை விசாரித்தார்கள். பிறகு 21.10.2015 அன்று நான் காவல் நிலையம் சென்றேன், அங்கும் விசாரித்தார்கள். சாட்சி ராஜேஷ் எனக்கு நண்பர் என்றால் சரிதான். நானும் ராஜேஷுும் ஒரே நகரில் குடியிருக்கிறோம். நான் சொல்வதுபோல் 12.10.2015 அன்று சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், ராஜேஷ் என்னுடைய

நண்பர் என்பதாலும் ஒரே இடத்தில் வசிப்பதாலும் அவருக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 21.10.2015 அன்று மதியம் 3.00 மணியளவில் என்னை போரூர் போலீசார் விசாரித்தார்கள். என்னை விசாரித்தது உதவி ஆய்வாளர். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், அசா1 நண்பர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.